# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, மாச்சு மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 26.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## *2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 10/2012*

## *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

**1.** *(1) இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.* சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

*(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் :*

*ஆயின், எவ்வாறாயினும் -*

*(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 7 ஆம் பிரிவுக்கு இச்சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்களும் ;*

*(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங் களும் ;*

*(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங் களும் ;*

*(ஈ) (i) முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கு இச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவால் அந்த உட்பிரிவிற்கு (த) என்னும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் ; அத்துடன்*

(ii) முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 34 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) மற்றும் பந்தி (ஆ) என்பவற்றிற்கு புதிய உட்பந்தி (x) என்பதில் புதிய விடயம் (அ) என்பதனையும் அந்த உட்பிரிவிற்கான புதிய உட்பந்தி (ix) என்பதில் புதிய விடயம் (அ) என்பதனையும் முறையே இச்சட்டத் திற்கான 15(2) ஆம் பிரிவால் சேர்ப்பதன் மூலமும்,

செய்யப்பட்ட திருத்தங்களும்,

எல்லா நோக்கங்களுக்காகவும் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது :-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) உட்பந்தி (xxviii) என்பதில், ‘‘1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் கீழ்’’ என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ‘‘2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XI ஆம் பாகத்தின் கீழ்’’ என்னும் சொற்களை இடுவதன் மூல மும் ;

(ஆ) உட்பந்தி (lxi) என்பதில் ‘‘2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப் பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபையின் இலாபங் களும் வருமானமும்.’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘2000ஆம் ஆண்டின்

*43* ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப் பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபை;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(இ) உட்பந்தி (lxi) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(lxii) *2009* ஆம் ஆண்டின் *23* ஆம் இலக்க, சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் ; அத்துடன்

(lxiii) *1998* ஆம் ஆண்டின் *50* ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நிதியம்.";

*(2)* அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் -

(அ) "*2011*, ஏப்பிறல் *1* ஆம் தேதிக்கு முன்னர் திரளுகின்ற அத்தரும நிறுவனத்தின் இலாபங் களும் வருமானமும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "தரும நிறுவனமொன் றின் இலாபங்களும் வருமானமும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "இலாபங் களும் வருமானமும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழில் ஒன்றின் *2011*, ஏப்பிறல் *1* ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் இலாபங்களுக்கும் வருமானமும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய கடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய கடன் -

(i) 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டும் அத்துடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத் திற்கு அத்தியாவசியமானதென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுமிருந்தால் ; அல்லது

(ii) 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்டால்,"

என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய கடன் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய கடன் -

(i) 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டும் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமானதென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுமிருந்தால் ; அல்லது

(ii) 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்டால்,"

என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*4. 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-*

*(1) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம்;"*

*என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*

*(2) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில், "இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*

*(3) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*"(ஓ) கம்பெனியொன்றின் பங்குதாரர் ஒருவருக்கு இச்சட்டத்தின் 16இ அல்லது 17அ என்னும் பிரிவின்கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட அக்கம்பெனியின் அத்தகைய இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபம், அத்தகைய பங்கிலாபம், அத்தகைய இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் எந்தக் காலப் பகுதியின்போது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின்போது செலுத்தப்படின் :*

*ஆயினும், அத்தகைய கம்பெனி ஏதேனும் நிர்மாணக் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வதிவுள்ள கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, அப்போது அத்தகைய விலக்களிப்பு, அத்தகைய இலாபங்களுக்கும் வருமானத்*

திற்கும் எந்தக் காலப்பகுதியின்போது விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின்போது அல்லது அதன் பின்னர் ஓராண்டிற்குள் அத்தகைய கம்பெனியால் செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(நந) கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்றின் அல்லது பரஸ்பர நிதியமொன்றின் ஒரு அலகின் மீட்டலிருந்து எவரேனும் ஆளுக்குத் திரளும் இலாபங்களும் வருமானமும் ;";

(2) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(மம) இலங்கைப் பிரசையொருவராக அல்லாதவரும் ஏதேனும் விளையாட்டுத்துறையின் பயிற்றுநர் ஒருவராக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட எவரேனும் தனியாளினால் இலங்கையில் அத்தகைய பயிற்றுநர் என்ற தன்மையில் பெறப்பட்ட இலாபங்களும் வருமானமுமாக விருக்கின்ற அத்தகைய தனியாளின் இலாபங் களும் வருமானமும் ;";

(3) பந்தி (ரரரரரர) என்பதன் உட்பந்தி (ii) இல் "17இ என்னும் பிரிவிற்" என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற் கும் பதிலாக, "16இ என்னும் பிரிவிற்" என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;";

(4) அப்பிரிவின் (லலலலல) என்னும் பந்தியை உடன டுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(லலலலலல) இலங்கையில் வதிவுள்ள எவரேனும் ஆளினால் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தில் பெறப் பட்ட ஏதேனும் புனையுரிமைத் தொகை அத்தகைய புனையுரிமைத் தொகை வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுமா யின் ;";

(5) அப்பிரிவின் (வவவவவ) என்னும் புதிய பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலமும் :-

"(வவவவவவ) ஏதேனும் விளையாட்டு மைதானத் தின், விளையாட்டரங்கின் அல்லது விளையாட்டுத்துறைக் கட்டிடத் தொகுதியின் நிர்வாகத்திலிருந்து எவரேனும் ஆளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் "அதிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதி யொன்றுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண் டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதிலிருந்து இதற்கான அட்டவணையின் நிரை II இல் குறித்து ரைக்கப்பட்ட முதலீட்டிற்கு நேரொத்தவாறு நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு நிரைI இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளின் வகைகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் அட்டவணையை உட்புகுத்துவதன் மூலமும் :-

"அட்டவணை

| நிரை I (செயற்பாடுகள்) | நிரை II (முதலீட்டின் தொகை ரூபாவில்) | நிரை III (விலக்களிப்பின் காலப்பகுதி) |
|---|---|---|
| கமத்தொழில், விலங்கு வளர்ப்பு அல்லது மீன் பிடித்தல் (பதனிடுதல் உட்பட) ஒரு கலைஞரின் ஆக்கம் உட்பட, தகவல் தொழினுட்பவியலின் புத்தாக்க வேலை. | 25 மில்லியனுக்குக் குறையாமல் ஆனால் 50 மில்லியனுக்கு குறைவாக | 4 ஆண்டுகள் |
| உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு ஆனால் கமத்தொழில் தொடர்பான சேவைகள் உள்ளடக்கப் படாமல் | 50 மில்லியனுக்குக் குறையாமல் ஆனால் 100 மில்லியனுக்கு குறைவாக | 4 ஆண்டுகள் |
| (உற்பத்தியின் 50% வீதத் திற்குமேல் உள்ளூர் சந்தையில் விற்கப்படவிருப்பின், உற்பத்திப் பொருட்கள் குறைந்த பட்சம் 35% சேர் பெறுமதியுடன் இருத்தல் வேண்டும்.) | 100 மில்லியனுக்குக் குறையாமல் ஆனால் 200 மில்லியனுக்கு குறைவாக | 5 ஆண்டுகள் |
| | 200 மில்லியனுக்குக் குறையாமல் | 6 ஆண்டுகள்". |

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, " புதிய பொறுப்பு முயற்சி" என்பது -

(அ) (i) கமத்தொழில் விலங்கு வளர்ப்பில் அல்லது மீன்பிடித்தலில் ;

(ii) ஏதேனும் மதுபான அல்லது புகையிலை உற்பத்தி பொருள்

தவிர்ந்த, ஏதேனும் பொருளின் உற்பத்தியில் (அத்தகைய பொருளின் பதனிடுதல் உட்பட) ;

(iii) தகவல் தொழினுட்பச் சேவையை வழங்குவதில் ;

(iv) மென்பொருள் அபிவிருத்தியில் ;

(v) தொழில் நடைமுறையை வெளியிலிருந்து பெறுதலில் ;

(vi) அறிவுசார் நடைமுறையை வெளியிலிருந்து பெறுதலில் ;

(vii) சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குதலில் ;

(viii) கல்வி சேவையை வழங்குதலில் ;

(ix) அழகியல் பராமரிப்புச் சேவையை வழங்குதலில் ;

(x) குளிரறை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குதலில் ;

(xi) உல்லாசப் பயணத்துறையில் ;

(xii) உடற் தகுதித் திறன் சேவைகளில் அல்லது விளையாட்டுத்துறைகளுக்கான வசதிகளை வழங்குதலில் ;

(xiii) கலைஞரின் ஆக்கம் உட்பட ஆக்கத் திறன் சார்ந்த பணியில் ;

(xiv) சிறிய நீர்மின் கருத்திட்டங்களில்,

ஈடுபட்டுள்ளதும் ;

(ஆ) எந்தப் பொறுப்பு முயற்சியின் நிலையான சொத்துக்களைக் கொள்வதில் 2011, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னராக, முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை (1) ஆம் உட்பிரிவிற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த பணத்தொகைக்குக் குறையாதிருக்கின்றதோ அந்தப் பொறுப்பு முயற்சியும் ; அத்துடன்

(இ) வர்த்தக ரீதியிலான தொழிற்பாடுகளை 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் பொறுப்பு முயற்சியும்,

ஆன ஒரு பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கு "முதலீட்டுத்தொகை" என்பது ஏதேனும் காணியினதும் பொறியினதும் பொறித்தொகுதியினதும் உபகரணத்தினதும் அத்துடன் வேறு நிலையான சொத்துக்களினதும் ஆகுசெலவு எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ ஆம் என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"குறித்துரைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள செயல் நுணுக்க இறக்குமதி மாற்றீட்டுப் பொறுப்பு

16ஈ. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தாபிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையின் IIஆம் நிரையிற் குறிப்பீடு செய்யப்படும் நேரொத்த குறைந்தபட்ச முதலீட்டிற்குக் குறையாத தொகையொன்றுடன், அவ்வட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதுமான

*முயற்சிகளின் இலாபங் களுக்கும் வருமானத் திற்கும் ஐந்தாண்டு களுக்கு விலக்களிப்பு.*

ஏதேனும் புதிய பொறுப்புமுயற்சியின், 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல் லைக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், அந்த வரிமதிப்பீட்டாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து அத்தகைய பொறுப்புமுயற்சி இலாபமீட்டத் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து அல்லது அத்தகைய பொறுப்புமுயற்சி வர்த்தக ரீதியிலான தொழிற்பாடுகளைத் தொடங்கிய தேதியிலிருந்து அத்தகைய பொறுப்புமுயற்சி இரண்டாண்டுகளைக்கொண்டவொரு காலப் பகுதியைப் பூர்த்திசெய்யும் வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து இதில் எது முன்னதாக நிகழ்கிறதோ, அதிலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I (உற்பத்திப்பொருள்) | நிரல் II (மில்லியன் அமெரிக்க டொலரில் குறைந்தபட்ச முதலீடு) |
|---|---|
| துணிவகை | 5 |
| அவுடதப்பொருட்கள் | 10 |
| பால் மா | 30 |
| சீமெந்து | 50". |

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் ''அத்தகைய பொறுப்பு முயற்சியின் முதலீடு செய்யப்பட்ட குறைந்தபட்சம் ரூபா பத்து மில்லியன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய பொறுப்பு முயற்சியில் 2012, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் முதலீடு செய்யப்பட்ட குறைந்த பட்சம் பத்து மில்லியன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அதே மூலப் பிரமாணங்களின்கீழ் தகைமைபெறும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதே மூலப் பிரமாணங் களின்கீழ் தகைமைபெறுவதும் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கூட்டிணைக்கப்பட்டதுமான" என் னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "வர்த்த மானியில் வெளியிடப்பட்ட கட்டளையால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2012, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை யால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) "கணிக்கப்பட்ட ஐந்தாண்டு காலப்பகுதி யொன்றுக்கு வருமானவரியிலிருந்து விலக் களிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, "கணிக்கப்பட்ட இதற்கான அட்டவணையின் நிரை I இல் குறித் துரைக்கப் பட்ட முதலீட்டிற்கு நேரொத்தவாறு அவ்வட்ட வணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும் :-

“**அட்டவணை**

| *நிரை I* (மில்லியன் ரூபாவில் முதலீடு) | *நிரை II* (விலக்களிப்புக் காலப்பகுதி) |
|---|---|
| 300 க்குமேல், 500 க்கு மேற்படாமல் | 6 ஆண்டுகள் |
| 500 க்குமேல், 700 க்கு மேற்படாமல் | 7 ஆண்டுகள் |
| 700 க்குமேல், 1,000 க்கு மேற்படாமல் | 8 ஆண்டுகள் |
| 1,000 க்குமேல், 1,500 க்கு மேற்படாமல் | 9 ஆண்டுகள் |
| 1,500 க்குமேல், 2,500 க்கு மேற்படாமல் | 10 ஆண்டுகள் |
| 2,500 க்குமேல் | 12 ஆண்டுகள்.”; |

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

“(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு, “புதிய பொறுப்பு முயற்சி” என்பது-

(அ) கீழே குறித்துரைக்கப்பட்ட எவையேனும் செயற்பாடு களில் ஈடுபட்டுள்ளதும்-

(i) படகுகள், ஔடதப் பொருட்கள், டயர்கள், ரீயூப்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள், தளபாடங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் அல்லது கனிப்பொருளை மூலமாகக்கொண்ட வேறு உற்பத்திப் பொருட்கள், இறப்பரை மூலமாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், உள்நாட்டில் பயிரிடப்பட்ட கமத்தொழில் உற்பத்திப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுக்குரிய உற்பத்திப் பொருட்கள், நிர்மாணப் பொருட்கள் அல்லது மின்சார அல்லது இலத்திரனியல் பொருட்கள்;

(ii) மொத்த உற்பத்தியில் தொண்ணூறு சதவீதத் திற்குக் குறையாமல் மற்றும் தைத்த ஆடைகள் விடயத்தில் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல், கருதப்பட்ட ஏற்றுமதிகள் உட்பட ஏற்றுமதியைக் கொண்டிருக்கும் பாரம்பரிய மற்ற பொருட்களின் உற்பத்தி, தயாரிப்பு அல்லது பதனீடு ;

(iii) உணவுப் பயிர்களின் அல்லது கைத்தொழிற் பயிர்களின் பயிர்ச்செய்கை ;

(iv) தோட்டப் பயிர்ச்செய்கை ;

(v) காடுகளின் பயிர்ச்செய்கை ;

(vi) பாற்பண்ணை, கோழிப் பண்ணை, பன்றி, வெள்ளாடு முதலியன தொடர்பில் விலங்கு வளர்ப்பு ;

(vii) அத்தகைய கொடுப்பனவுகளின் மொத்தத் தொகையில் எழுபத்தைந்து சதவீதத்திற்குக் குறையாமல், மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தில் இருக்குமிடத்து, கொடுப்பனவுக்கு இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவருக்கு அல்லது பங்குடைமையொன்றுக்கு சேவைகள் வழங்குதல் ;

(viii) உல்லாசப் பயணத்துறை அல்லது உல்லாசப் பயணத்துறை சார்ந்த கருத்திட்டங்கள் ;

(ix) ஹோட்டல்கள் அல்லது விருந்தினர் விடுதிகள் அல்லது அவற்றையொத்த சேவைகள் ;

(x) வர்த்தகக் கட்டிடங்களின் நிர்மாணம் உட்பட உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் ;

(xi) ஏதேனும் களஞ்சியத்தொகுதியின் அல்லது களஞ்சிய வசதியின் அபிவிருத்தி ;

(xii) புதுப்பிக்கத்தகு வளங்களைப் பயன்படுத்தும் மின் பிறப்பாக்கம் ;

(xiii) கைத்தொழிற் பேட்டைகளை, விசேட பொருளாதார வலயங்களை அல்லது அறிவுசார் நகரங்களைத் தாபித்தல் ;

(xiv) *நகர வீடமைப்பு அல்லது பட்டின நிலையத்தின் அபிவிருத்தி ;*

(xv) *ஏதேனும் உடல்நல வசதியை அல்லது கழிவு முகாமைத்துவ முறைமைகளை வழங்குதல் ;*

(xvi) *நீர் சேவைகளின் அபிவிருத்தி ;*

(xvii) *உள்துறை நீர் வழிகளின் அல்லது சார்புடைய போக்குவரத்தின் (பண்டங்கள் அல்லது பயணிகள்) அபிவிருத்தி ;*

(xviii) *மருத்துவ மனைகளின் நிர்மாணமும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்குதலும் ;*

(xix) *வானூர்திகளை அல்லது கடற்துறைக் கலன்களை பழுது பார்த்தல் அல்லது கப்பல்களை உடைத்தகற்றுதல் ;*

(xx) *விளையாட்டுத்துறை சேவைகள் (உதாரணம் மோட்டார் பந்தயம் அல்லது கொல்வ் திடல்) ;*

(xxi) *தகவல், தொழினுட்பவியல் ;*

(xxii) *மென்பொருள் அபிவிருத்தி ;*

(xxiii) *வியாபாரம் அல்லது தகவல் செயல்முறையை வெளியினின்று பெறுதல் ;*

(xxiv) *பாரமற்ற அல்லது கனரகப் பொறியியல் கைத்தொழிலில் ஏதேனும் கருத்திட்டம் ;*

(xxv) *கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருக்கட்டல் (பாற்பண்ணை அபிவிருத்தி) ;*

(xxvi) *கல்விச் சேவைகளை வழங்குதல் ; அல்லது*

(xxvii) தேசிய பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு அமைச்சரால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் செயற் பாடு ; அத்துடன்

(ஆ) அதன் வர்த்தகச் செயற்பாடுகளை 2011, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கு கின்றதுமான,

ஏதேனும் பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்.";

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் ''எவையேனும் விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குறித்துரைக் கப்பட்ட எவையேனும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தும்'' என்னும் சொற்கைள இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில் "பொறுப்பு முயற்சியைத் தொடங்கிய ஓராண்டினுள் முதலீடு செய்யப்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொறுப்பு முயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டிற்குள் ஆனால் 2012, மாச்சு 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் முதலீடு செய்யப்பட்ட'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அதன் (6) ஆம் உட்பிரிவில், ''முயற்சி மூலதனக் கம்பெனி'' என்னும் சொல்ல மைப்பில், ''1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தின் (இ) என்னும் பந்தியில், "2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,"2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் பந்தி (அ) என்பதற்கான காப்பு வாசகத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப்பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஈ) சக்தியின் சிக்கனத்தின் நோக்கங்களுக்கு ஏதேனும் உயர்தொழினுட்பப் பொறி, பொறித்தொகுதி அல்லது உபகரணம் 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் கொள்ளப்படுமிடத்து, வீதமானது கொள்ளலின் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும் ;";

(3) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் "சதவீதத்திற்குச் சமமானவொரு தொகை;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சதவீதத்திற்குச் சமமானவொரு தொகை :

ஆயின், 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான கழிப்பனவு, அத்தகைய ஆராய்ச்சி, ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படின் அத்தகைய ஆளினால் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் முந்நூறு சதவீத்திற்குச் சமமான தொகையொன்றாதல் வேண்டும் ;

இப்பந்தியின் நோக்கத்திற்கு -

(i) "அரசாங்க நிறுவனம்" என்பது ஐம்பது வீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அரசாங்கத்தினால் கொண்டிருக்கப்படின், ஏதேனும் கம்பெனியையும் உள்ளடக்கும் ; அத்துடன்

(ii) "விஞ்ஞான, கைத்தொழில், கமத்தொழில் அல்லது வேறு ஏதேனும் ஆராய்ச்சி என்பது உற்பத்திப்

பொருளின் அல்லது விளைபொருளின் புத்தாக்கப் புனைவிற்கு அல்லது ஏதேனும் உற்பத்திப் பொருளின், விளைபொருளின் அல்லது சேவையின் தரத்தை அல்லது பண்பியல்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி எனப் பொருள்படும். ஆனால் ஏதேனும் சந்தைப்படுத்தும் ஆராய்ச்சியை அல்லது சாத்தியக்கூறுபற்றிய ஆய்வை உள்ளடக்கமாட்டாது.

(4) பந்தி (ஓ) என்பதற்கான காப்பு வாசகத்தின் (i) ஆம் உட்பந்தியில் "இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "அத்தகைய அனுகூலம் இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (த) என்னும் பந்தியின்கீழ் விலக்களிக்கப் படாதவிடத்து, இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(5) அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்தியில், "சதவீதத்தை அவ்வரிமதிப்பீட்டாண்டிலும் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் கூட்டு மொத்தம், அத்தகைய கம்பெனியின் தொடக்கப் பகிரங்க முனைவுகையின் பெறுமதியினது ஒரு சதவீதத்தை விஞ்சுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வரிமதிப்பீட்டாண்டிலும் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் கூட்டு மொத்தம் அத்தகைய கம்பெனியின் தொடக்கப் பகிரங்க முனைவுகையின் பெறுமதியினது ஒரு சதவீதத்தை விஞ்சுதலாகாது ;" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(6) அவ்வுட்பிரிவின் (த) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ந) எவையேனும் விளையாட்டு மைதானத்தின், விளையாட்டரங்கின் அல்லது விளையாட்டுத் துறைக் கட்டிடத் தொகுதியின் பேணலில் அல்லது முகாமைத்துவத்தில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் ''ஏற்பாடு செய்தல்;'' என்பதிலிருந்து ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக, என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''ஏற்பாடு செய்தல் ; அல்லது

(iii) அத்தகைய சேவைகளை வழங்குவதில் பிரத்தியேகமாக ஈடுபட்டிருக்கும் கம்பெனியொன்றாகிய அத்தகைய ஆளினால் வடிவமைப்பு அபிவிருத்தி, உற்பத்திப் பொருள் அபிவிருத்தி அல்லது உற்பத்திப் பொருளின் புத்தாக்கப் புனைவு தொடர்பிலான சேவைகள் :

ஆயினும் 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு -

(அ) எவரேனும் ஆளினால் இலங்கையில் கொண்டுநடாத்தப்படும் அல்லது பிரயோகிக் கப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து அல்லது தொழிலிலிருந்து இலாபங்களை அல்லது வருமானத்தை உண்டுபண்ணுவதில் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்கை யில் உறப்பட்ட செலவினத்திலிருந்து -

(i) ஏதேனும் பொருளின் அல்லது எவையேனும் பண்டங்களின் ஏற்றுமதி வியாபாரத்தை ஊக்குவித்தல் அல்லது வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவிற்கான எவையேனும் சேவைகளை வழங்குதல் தொடர்பில் மாத்திரம் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் செலவுகளை ; அல்லது

(ii) பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அங்கீகரிக்கப் பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றை நிறைவேற்றுகையில் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் உறப்பட்ட அத்தகைய செல வினத்தை ; அல்லது

(iii) 2012, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு வடிவமைப்பு அபிவிருத்தி, உற்பத்திப் பொருள் அபிவிருத்தி அல்லது உற்பத்திப் பொருள் புத்தாக்கப் புனைவு தொடர்பிலான சேவைகளை வழங்குவதில் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனி யால் இலங்கைக்கு வெளியே பிரயாணம் செய்வதில் உறப்பட்ட அத்தகைய செலவினத்தை,

கழிப்பனவு செய்தபின்னரான அத்தகைய செலவினத்தின் பாகம் ;

(ஆ) உடன் முற்போந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய வியாபாரத்தின் அல்லது தொழிலின் இலாபங்களினதும் வருமானத் தினதும் இரண்டு சத வீதத்திற்குச் சமமான வொரு தொகை,

இவற்றுள் எந்தத்தொகை குறைவானதோ அந்தத் தொகை, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய வியாபாரத்திலிருந்து அல்லது தொழிலிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களையும் வருமானத்தையும் ஆய்ந்தறிகையில் கழிப்பனவு செய்யப்படற்பாலதாதல் வேண்டும் ;”;

(2) பந்தி (ர) என்பதற்கான காப்புவாசகத்தில் "1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது, அதன் 5 ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(உ) எவரேனும் ஆள் எந்தத் தொழிலின் ஆண்டு மொத்த விற்பனை வரவு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்தத் தொழில் எதனையும் தொடங்குமிடத்து, அத்தகைய தொழிலின் வர்த்தக ரீதியிலான தொழிற்பாடு தொடங்கப்பட்ட வரிமதிப் பீட்டாண்டிற்கு உடன்முற்போந்த வரிமதிப்பீட்டாண் டில் அவ்வாளினால் உறப்பட்ட மூலதனச் செலவுகள் தவிர்ந்த எவையேனும் தொடக்கச் செலவுகள் வர்த்தக ரீதியிலான தொழிற்பாடு தொடங்கப்பட்ட அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான அந்த ஆளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திலிருந்து கழிப்பனவு செய்யப் படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின் றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "உறப்பட்ட செலவினம் ; அத்துடன் " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உறப்பட்ட செலவினம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில், ''ஏதேனும் பணத்தொகை ;'', என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் பணத் தொகை ;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

''(ண) ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்பட்டு மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறானதுமான ஏதேனும் பொருளாதாரரீதியில் ஓரங்கட்டப்பட்ட கிராமத்தில் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவினம் ;

(த) அத்தகைய பொறுப்பு முயற்சி 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொழிலைக் கொண்டு நடாத்த ஆரம்பித்திருப்பின் பிரிவு 16இ அல்லது பிரிவு 17அ இன் கீழ் விலக்களிப்பதற்காக தகைமை பெற்றிருக்கும் ஏதேனும் பொறுப்பு முயற்சியின் விரிவாக்கத்தில் 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினால் நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட ஐம்பது மில்லியன் ரூபாய்களுக்கு குறையாத ஒரு முதலீடு; அத்துடன்

(ந) அத்தகைய பொறுப்பு முயற்சி 2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொழிலைக் கொண்டு

நடாத்த ஆரம்பித்திருப்பின் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட 16ஈ என்னும் பிரிவின்கீழ் விலக்களிப்பதற்காக அத்தகைய பொறுப்பு முயற்சி தகைமைபெற்றிருக்கும் முதலீடு ஒன்றாகவிருந்து, அவ்வட்டவணையின் நிரைI இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உற்பத்திப் பொருளின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியில் நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட இச்சட்டத்தின் 16ஈ என்னும் பிரிவிற்கான அட்டவணையின் நிரை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத் தொகைக்கு குறையாத முதலீடு.'' ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் -

(அ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், ''(ங), (ச) மற்றும் (ட) என்பவற்றில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(ங), (ச), (ட), (ண), (த) மற்றும் (ந) என்பவற்றில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (viii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

''(ix) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையளிக்கும் எல்லாக் கொடுப்பனவுகளும் தொடர்பில் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது ;

(x) அவரினால் செய்யப்பட்ட எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் -

"(அ) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2)ஆம் உட்பிரிவின் (த) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமையளிக்கும் கொடுப்பனவின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது :

ஆயினும், எவ்வாறாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் தகைமை அளிக்கும் கொடுப்பனவாக கழிப்பனவு செய்வதற்கு தகைமைபெறுவதற்கான ஆகக் குறைந்த முதலீட்டை அடைவதற்காகக் கூட்டுமொத்தமாக்கப்பட்டு இருக்கின்றவிடத்து, ஏதேனும் முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் (2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்ற) செய்யப்பட்ட அத்தகைய முதலீடு எந்த வரிமதிப்பீட்டாண்டில் ஐம்பது மில்லியன் ரூபா மொத்தத் தொகை அடையப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ந) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய

தகைமையளிக்கும் கொடுப்பனவின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது :

ஆயினும், எவ்வாறாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிமதிப் பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் தகைமையளிக்கும் கொடுப்பனவாக கழிப்பனவு செய்வதற்கு தகைமை பெறுவதற்கான ஆகக்குறைந்த முதலீட்டை அடைவதற்காகக் கூட்டு மொத்தமாக்கப்பட்டு இருக்குமிடத்து, ஏதேனும் முன்னைய வரிமதிப் பீட்டாண்டில் (2012, ஏப்பிறல் 2 ஆந் தேதியன்று அலலது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவிருக்கின்ற) செய்யப்பட்ட அத்தகைய முதலீடு எந்த வரிமதிப் பீட்டாண்டில் முறையே 59இ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த முதலீடு அடையப்பட்டிருக்கின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.'';

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் ''(ங), (ச) மற்றும் (ட)'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(ங), (ச), (ட), (ண), (த) மற்றும் (ந),''; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vii) ஆம் உட்பந்தியில், ''பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது.'', என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது ;''; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(உ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(viii) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அக் கம்பெனியால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையளிக்கும் எல்லாக் கொடுப்பனவுகள் தொடர்பில் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது ;

(ix) அவரினால் செய்யப்பட்ட எல்லாத் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் தொடர்பிலும் -

(அ) ''அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2)ஆம் உட்பிரிவின் (த) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமையளிக்கும் கொடுப்பனவின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது :

ஆயினும், எவ்வாறாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் தகைமை அளிக்கும் கொடுப்பனவாக கழிப்பனவு செய்வதற்கு தகைமைபெறுவதற்கான ஆகக் குறைந்த முதலீட்டை அடைவதற்காகக் கூட்டுமொத்தமாக்கப்பட்டு இருக்கின்றவிடத்து, ஏதேனும் முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் (2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்

ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்கின்ற) செய்யப்பட்ட அத்தகைய முதலீடு எந்த வரிமதிப்பீட்டாண்டில் ஐம்பது மில்லியன் ரூபா மொத்தத் தொகை அடையப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வரிமதிப்பீட்டாண்டில் அவரினால் செய்யப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ந) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமையளிக்கும் கொடுப்பனவின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது :

ஆயினும், எவ்வாறாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடுகள் தகைமை அளிக்கும் கொடுப்பனவாக கழிப்பனவு செய்வதற்கு தகைமை பெறுவதற்கான ஆகக்குறைந்த முதலீட்டை அடைவதற்காகக் கூட்டு மொத்தமாக்கப்பட்டு இருக்கின்ற விடத்து, ஏதேனும் முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் (2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவிருக்கின்ற) செய்யப்பட்ட அத்தகைய முதலீடு எந்த வரிமதிப்பீட்டாண்டில் முறையே 59இ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்ற ஆகக் குறைந்த முதலீட்டை அடைகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட முதலீடு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(7அ) நான்காம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (x) என்னும் உட்பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியின் (ix) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவின் எழுபத்தைந்து சதவீதம், அவ்வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்துறும் மூன்று வரிமதிப்பீட்டாண்டு காலப்பகுதிமீது சமமான தொகைகளில் பகிரப்படலாம். அத்தகைய பகிரப்பட்ட தொகை அத்தகைய ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிலும் அவ்வாளின் வரிமதிப் பிடற்பாலதான வருமானத்தில் இருந்து கழிக்கப்படற் பாலதாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "முதலாம் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "முதலாம் அட்டவணையின் I ஆம் பாகம், Iஅ என்னும் பாகம் அல்லது Iஆ என்னும் பாகத்திலும் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "முதலாம் அட்டவணையின் Iஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்களில்" என்னும் சொற்களும் எண்களும் அவ்வுட்பிரிவில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "முதலாம் அட்டவணையின் I ஆம் பாகம், Iஅ என்னும் பாகம் அல்லது Iஆ என்னும் பாகத்திலும் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங் களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17**. இரண்டாயிரத்து பதினோராம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் உட்பந்தி (ii) இல் "வீதிகள் அல்லது பாலங்கள்; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வீதிகள் அல்லது பாலங்கள்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் உட்பந்தி (iii) இல் "நீர்வழங்கல் வடிகால் அல்லது கழிவகற்றும் முறைகள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீர்வழங்கல், வடிகால் அல்லது கழிவகற்றும் முறைகள் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) உட்பந்தி (iii)ஐ உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(iv) துறைமுகம், விமான நிலையம் அல்லது தொலைத்தொடர்பு அல்லது மின்சாரத்துறையின் ஏதேனும் உட்கட்டமைப்பு வேலைத் திட்டம்,".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 48ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"செயல் நுணுக்க இறக்குமதி மாற்றீட்டுப் பொறுப்பு முயற்சிகளுக்கு விலக்களிப்புக் காலப்*

48ஆ. பிரிவு 16ஈ யில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க இறக்குமதி மாற்றீட்டு பொறுப்புமுயற்சியிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தின், அப்பிரிவின்கீழ் வரிவிலக்களிப்பு முடிவுற்ற தேதியின்பின் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான

*பகுதிக்குப் பின்னர் ஏற்புடையதான வருமான வரிவீதம்.*

வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்திற்கான ஐந்தாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டுக்கு எவரேனும் ஆளின் இலாபங்களும் வருமானமும்'', என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு (கொளிக்கம்பெனி, துணைக்கம்பெனி அல்லது கம்பெனிகளின் தொகுதி ஒன்றின் இணைக்கம்பெனி என்பனவாகவிராத) எவரேனும் ஆளின் இலாபங்களும் வருமானமும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59இ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 59இ என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :-

*''செயல் நுணுக்க இறக்குமதி மாற்றீட்டுப் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையற் பாலதான வரிவீதம்.*

59இ. (1) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்டதும் எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையினால் கொண்நடாத்தப்படுவதுமான ஏதேனும் உளதாம் பொறுப்புமுயற்சியின் (ஏதேனும் மூலதனச் சொத்து விற்பனையிலிருந்தான எவையேனும் இலாபங்கள் மற்றும் வருமானம் தவிர்ந்த) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய பொறுப்புமுயற்சி (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான ஆகக்குறைந்த முதலீட்டைத் திருப்திப்படுத்துகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு தொடங்குவதிலிருந்து கணிப்

பிடப்பட்ட 5 ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றுக்கு இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வரிவிதிக் கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக "உளதாம் பொறுப்புமுயற்சி" என்பது 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் விரிவாக்கம் ஒன்று என்றவாறு நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட கீழே தரப்பட்ட நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட வாறான ஆகக்குறைந்த முதலீடு ஒன்றுடன் கீழே தரப்பட்ட நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்ற பொறுப்புமுயற்சி ஒன்று எனப் பொருள்படும்.

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| *(உற்பத்திப்பொருள்)* | *(ஆகக்குறைந்த முதலீடு அமெரிக்க டொலரில் அல்லது அதற்குச் சமமான தொகையில்)* |
| துணிவகை | 5 மில்லியன் |
| அவுடதப்பொருட்கள் | 10 மில்லியன் |
| பால் மா | 30 மில்லியன் |
| சீமெந்து | 50 மில்லியன்.". |

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத் தின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்க கம்பெனியால்" என்பதிலிருந்து

"இப்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும்" என்பது வரையான சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனி, எந்தக் கம்பெனிகளின் தொகுதிகளில் குறைந்தபட்சம் ஒரு கம்பெனியாவது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியாக இருக்கின்றதோ அந்தக் கம்பெனியின் உறுப்பொன்றாக உள்ள வேறு ஏதேனும் கம்பெனியால் அல்லது அந்த ஆண்டிற்கு இருநூற்றி ஐம்பது மில்லியன் ரூபாவிற்குக் குறையாத ஆண்டு மொத்த விற்பனை வரவை அல்லது நூறு மில்லியன் ரூபாவிற்குக் குறையாத தேறிய இலாபத்தையுடைய வேறு கம்பெனியால் நடாத்தப்படுமிடத்து, அப்போது அத்தகைய விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்க கம்பெனிக்கு, தொகுதிக் கம்பெனியின் வேறு உறுப்பினருக்கு அல்லது வேறு கம்பெனிக்கு இப்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியால், எந்தக் கம்பெனிகளின் தொகுதிகளில் குறைந்தபட்சம் ஒரு கம்பெனியாவது விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியாக இருக்கின்றதோ அந்த வேறு ஏதேனும் கம்பெனியால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 108 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில், "1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் "2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான," என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(5) ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம் 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து அல்லது அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியின் பின்னர் தாபிக்கப்படுகின்றவிடத்து, அப்போது அத்தகைய தாபனத் தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு ஆணையாளர் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுன் இலங்கை மத்திய வங்கியினால் இந்நோக்கத்திற்காக வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கத் தாபிக்கப்பட்ட முதலீட்டு நிதியத்தில் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் வருமானவரி நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்டவாறான அதே தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தவணைக் கொடுப்பனவுகளில், அதனது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஐந்து சதவீதத்தை முதலீடு செய்தல் வேண்டும்.".

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தி (அ) இனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அ) (i) மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் கூடுதலான அல்லது ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம் ரூபாவிற்கு கூடுதலான ஊதியத்தைப் பெறும் எவரேனும் தனியாளை ;

(ii) எப்பணிப்பாளருக்கு அல்லது நிறைவேற்று அலுவலரல்லாத பணிப்பாளருக்கு அத்தகைய தொழில்தருநரால் கொடுப்பனவு எதுவும் செய்யப்படுகின்றதோ அல்லது அவரினால் அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ளதோ

அல்லது ஊழியர் ஒருவராக அல்லது வேறே தேனும் தன்மையினவானவராக வேறேதேனும் நன்மையைப் பெறுகின்றாரோ அப்பணிப்பா ளரொருவராக அல்லது நிறைவேற்று அலுவல ரல்லாத பணிப்பாளரொருவராகவிருக்கும் எவரேனும் தனியாளை; அல்லது''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 191 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 191 ஆம் பிரிவானது ''1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ள'' என்னும் சொற்களும் எண்களும் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் "2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ள'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது :-

(1) "பங்கிலாபம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தில் பந்தி (அ)வின் (iii) ஆம் உட்பந்தியில் ''வேறேதேனும் கம்பெனியிலுள்ள தொகுதிக் கடன்களாக ; அத்துடன்'', என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறேதேனும் கம்பெனி யிலுள்ள தொகுதிக் கடன்களாக; அத்துடன்

(iv) பங்குப் பத்திரங்களிலான பங்கிலாபம் அல்லது இனத்தைச் சேர்ந்த பங்கிலாபம் ; அத்துடன் '' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) "பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தில் "1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிச் சட்டம் தவிர்ந்த,'', என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிச் சட்டம் தவிர்ந்த,'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

**27.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் V இல் "பாகம் I இன் படி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாகம் I, பாகம் Iஅ அல்லது பாகம் Iஆ என்பதன்படி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**28.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை, அதன் பாகம் - (ஆ) வின் 3 ஆம் விடயத்தின் ஆ என்னும் பந்தியில் "2011, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**29.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.*

(1) அவ்வட்டவணையின் 1 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"1. பிரிபடா இந்துக் குடும்பங்கள் -

(அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, — 30 சதவீதம்

(ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , — 24 சதவீதம்";

(2) அவ்வட்டவணையின் 3 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும் :-

"3. (இறுதிவிருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் தவிர்ந்த) நிறைவேற்றுநரும், (ஒழிப்போன் தவிர்ந்த) பெறுநரும் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , | 24 சதவீதம்"; |

(3) அவ்வட்டவணையின் 4 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும் :-

"4. (இறுதிவிருப்பாவணங்களின் கீழான நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் உட்பட) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , | 24 சதவீதம்"; |

(4) அவ்வட்டவணையின் 5 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும் :-

"5. பங்குடைமைகள் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , | 24 சதவீதம்"; |

(5) அவ்வட்டவணையின் 6 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"6. பங்குடைமைகள் (செய்யப்பட்ட ஏதேனும் மதிப்பீட்டின்மீது)-

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , | 24 சதவீதம்"; |

(6) அவ்வட்டவணையின் 8 ஆம் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியின் "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும்

எண்களுக்கும் பதிலாக ''2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(7) அட்டவணையில் 11 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

"11. (இலங்கை அரசாங்கம், ஐக்கிய இராச்சிய அரசாங்கம் தவிர்ந்த) அரசாங்கங்கள் -

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |
| (ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு , | 28 சதவீதம்"; |

(8) அட்டவணையில் 12 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும் :-

"12. 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, வியாபாரப் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்குரித்தாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சிகள் -

(i) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின்மீது-

| | |
|---|---|
| (அ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, | 30 சதவீதம் |

(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டுக்கு , 28 சதவீதம்

(ii) (i) பந்தியின்கீழ் கொடுக் கப் படற் பாலதான வரியினை கழித்தபின்னர் அதிலிருந்தான இலாபங் களின் மீதிக்கு, 25 சதவீதம்".

(9) அட்டவணையின் 15 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தினை இடுவதன்மூலமும் :-

"15. (மேலே குறிப்பிடப்பட்டவர்களும் முதலாம் இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப் பட்டவர்களும் தவிர்ந்த) ஆட்கள் -

(அ) 2011, ஏப்பிறல் 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டுக்கு, 30 சதவீதம்

(ஆ) 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டுக்கு , 28 சதவீதம்".

**30**. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத் திற்கான ஐந்தாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் அட்டவணை யைத் திருத்துதல்.

(1) அவ்வட்டவணையின் 14அ என்னும் விடயத்தில் "2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்", என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அதன் 33 ஆம் விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தினை இடுவதன் மூலமும் :-

| | |
|---|---|
| "33. பிரிவு 59ஆ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆகக்கூடியது 10 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 10 சதவீதம் |

(3) அவ்வட்டவணையின் 33 ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

| | |
|---|---|
| "34. பிரிவு 48ஆ வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்கள் தொடர்பில் வருமானவரி வீதம் | தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆகக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 12 சதவீதம் |

35. அதனில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து வருட காலப் பகுதியினதும் வருகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு

| | |
|---|---|
| 59இ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்தான ஏதேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆகக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 12 சதவீதம் |
| 36. 2011, நவெம்பர் 21 ஆந் தேதிக்குப்பின்னர் தேதிக்குப்பின்னர் தாபிக்கப்பட்டதும் அபிவிருத்தி வங்கித் தொழிலில் மாத்திரம் ஈடுபட்டுள்ளதுமான கிளை ஒன்றாக வருகின்ற வர்த்தக வங்கி ஒன்றின் ஏதேனும் கிளையின் இலாபங்களிற்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | 24 சதவீதம் |
| 37. பிரிவு 25 இன் (1) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகளிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆகக்கூடியது 16 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 20 சதவீதம் |
| 38. சுகாதாரக்கவனிப்பு சேவைகளின் ஏற்பாட்டில் இருந்தான எவரே | |

| | |
|---|---|
| னும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | *தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆககக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 12 சதவீதம்* |
| *39*. கூட்டுத் தொழிற் முயற்சியின் நோக்கத்திற்கு இலங்கையில் தேயிலை ஏலவிற்பனை ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான உற்பத்தி வருமானத்தின் மீது இலங்கை வியாபாரப் பெயர் ஒன்றுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட படிவத்தில் தூய இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கு தேயிலை ஏற்றுமதியாளர் ஒருவருடன் கூட்டுத்தொழில் முயற்சி ஒன்றைத் தாபித்துள்ள எவரேனும் தேயிலைப் பயிர்ச் செய்கையாளர் அல்லது உற்பத்தியாளருக்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | *12 சதவீதம்.* |
| *40*. கைத்தொழில் உற்பத்திகளின் (உள்ளூரில்) உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானங்களிற்கு ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் | *தனியாள் ஒருவருக்கு முதலாம் அட்டவணையின்படி ஆனால் ஆககக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக கம்பெனி ஒன்றுக்கு 12 சதவீதம்.".* |

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்